56 (53) 101

**NEP/CO/GEN/02**

**27.11.2006**

**சுற்றறிக்கை இல : 16/2006**

சகல கூ.அ.உ..ஆணையாளர்களுக்கும்,

**கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழான விசாரணையும், பரிசோதனையும்**

---

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளருக்குரித்தான சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உதவுதல் மாவட்ட ரீதியில் செயலாற்றும் எமது திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களினதும் கடமைப் பொறுப்பாகும்.

கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்து அதன் அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக, கல்வி, கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தலுக்கான ஏற்பாட்டினை முன்னெடுத்தல் கூட்டுறவாளரின் கடமையாகும்.

கூட்டுறவாளருக்கான கடமைப் பொறுப்பினை நிறைவு செய்தலில் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் சங்கத்தின் நிதியினது பாதுகாவலனாகவும் செயலாற்ற வேண்டியவரும் திணைக்கள அலுவலர்களேயாவர்.

எனவே கூட்டுறவுச் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் விசாரணை அல்லது பரிசோதனையில் வெளிப்படுத்தப்படும் குற்றச் செயல்களுக்கு இயக்குனர் சபையுடன் அச்சங்கத்திற்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

இதனடிப்படையில் 46(1) பிரிவின் கீழ் விசாரணை அல்லது பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ளும் அலுவலர் ஒவ்வொருவரும் பின்வரும் வழிமுறையைப் பின்பற்றவும்.

1. 46(1) பிரிவின் கீழான விசாரணை அல்லது பரிசோதனைக்கான நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றதும் தனது நாளாந்த கடமைகள் அனைத்தையும் இடைநிறுத்தி விசாரணையை அல்லது பரிசோதனையை உடன் ஆரம்பித்தல் வேண்டும்.

2. 46(1) பிரிவின் கீழான பரிசோதனைக்கான உச்ச காலம் ஒரு வாரம் ஆகும். ஒரு வாரகாலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கத் தவறும் திணைக்கள அலுவலர் ஒவ்வொருவரும் அதற்கான காரணத்தை மிகத்தெளிவாகக் காட்டி, உதவி ஆணையாளரின் விளக்கமான சிபாரிசுடன் ஒரு குறுகிய கால நீடிப்பு பெறலாம். அந்தச் சமயத்தில் இக்கோரிக்கையுடன் இடைக்கால அறிக்கையொன்றையும், (ஒருவார பரிசீலனையின் போது கண்ட காண்புகள்) பூரண அறிக்கை தயாரிப்பதற்கு மேலும் என்னென்ன செய்யவேண்டியுள்ளது என்பது பற்றியும் தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாதவிடத்து, இவர்கள் பதிவாளரின் கட்டளையை உதாசீனம் செய்தவர்களாக கருதப்பட்டு ஒழுக்காற்றிற்கு உட்படுத்தப்படுவர்.

3. திணைக்கள சேவையிலுள்ள உதவி ஆணையாளர், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஆகிய பதவி வகிப்போர் ஒவ்வொருவரும் 46(1) பிரிவின் கீழான விசாரணை பரிசோதனைகளை சரியாகவும், முறையாகவும், பூரணமாகவும் மேற்கொள்ளும் திறன் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. இவர்கள் ஒவ்வொருவரும் 46(1) பிரிவில் குறிப்பிடப்படும் விசாரணைக்கும், பரிசோதனைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

5. 46(1) விசாரணை அல்லது பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்படும் அறிக்கை பின்வரும் விடயங்களையும் ஆவணங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

5.1 ஆரம்பத் தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

- பதிவுச்சான்றிதழ், துணைவிதி என்பனவற்றிற்கு அமைய சங்கத்தின் பெயர் உள்ளடங்கிய சங்கம் பற்றிய ஆரம்பத் தகவல்கள்.
- இயக்குனர், இயக்குனர் சபை பற்றிய விபரம் (பெயர், தெரிவு்.நியமனம், திகதி போன்றவை)
- நிகழ்வுக்குரிய காலத்தில் சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பற்றிய பெயர், விபரம், காலம்.

5.2 அறிக்கை பூரணமானதாக அமைதல் வேண்டும்.

1. நிகழ்வு – சம்பவம் நடைபெற்றுள்ள வழிமுறை.
2. தாங்கள் அவதானித்த குறைபாடுகள் - சட்டம், விதி, துணைவிதி, நடைமுறை விதி, சுற்றறிக்கை தீர்மானம் என்பனவற்றிற்கு முரணானவை.
3. அவதானித்த குறைபாடுகள் பற்றி சம்பந்தப்பட்ட அலுவலர் தெரிவிக்கும் கருத்து – எழுத்து மூலமான, விரிவான வாக்கு மூலம்.
4. வாக்குமூலம் ஒவ்வாமைக்கு காரணம் - ஒப்பீடு செய்தல் வாக்குமூலக் கருத்து ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. அல்லது ஏன் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.
5. வாக்குமூலம் - ஆவணம் மூலம் உறுதிப்படுத்த முடியாதவை மட்டும் ஆவணப்படுத்துவதற்காக தன் நிலையில் பதிவு செய்தல் வேண்டும்.
6. அவதானிப்பு – ஒவ்வாமையினூடாக தாங்கள் அவதானித்த தவறுகள், குற்றங்கள், இழப்புக்கள், நட்டங்கள் என்ன?
7. சிபாரிசு – மேற்கொள்ள முடியும் என தாங்கள் சிபாரிசு செய்யும் நடவடிக்கை என்ன?

5.3 குற்றச் செயல், இழப்பு, நட்டம் என்பன தங்களினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிப்பதற்கு அவசியம் எனக்கருதும் ஆவணங்களின் மூலப்பிரதி அல்லது கூட்டுறவுச் சங்க விதி 45ற்கு அமைவாக உறுதிப்படுத்திய பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

5.4.1. சந்தேகத்துடன் அல்லது ஆய்விற்கு முன் கிடைக்கப் பெற்ற தகவல் முற்றாகவே சரியானது என்ற முடிவுடன் பரிசோதனை அல்லது விசாரணை ஆரம்பிக்கப்படலாகாது.

5.4.2. ஆயினும் ஆய்வின் போது சந்தேகம் எழுமிடத்து ஆய்வானது மிகவும் ஆழமானதாக இறுதிவரை பல கோணங்களிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனூடாக கிடைக்கப் பெற்ற விபரம் அறிக்கையில் இடம் பெறல் வேண்டும்.

5.4.3 உதாரணம் :- E.N.T.என்டபிரைஸ். எனும் பதிவபெற்ற நிறுவனக் கொள்வனவிற்கு E.N. தில்லையம்பலம் எனும் பெயரில் காசோலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. - கிடைக்கப்பெற்ற தகவல் - X திரு.தில்லையம்பலமிடம் பணம் பெற்றது.

55 [52] 100

### 5.4.4. ஆய்வுக்குட்படுத்த வேண்டியது :

- நிறுவனத்தின் பெயரில் ஏன் காசோலை எடுக்கப்படவில்லை?
- திரு.தில்லையம்பலம் பெயரில் காசோலை எழுதுவதற்கான கோரிக்கை உள்ளதா? யார் அங்கீகரித்தது?
  வாக்குமூலம்
- காசோலை சங்கத்தில் பணமாக்கப்பட்டதா? ஆயின் படிவம் 11A, 11, 12, வங்கி வைப்பு பற்றுச்சீட்டு.
  காசாளர் வாக்குமூலம் - ஏன், யார் அங்கீகரித்தது. யாரிடம் பணம் வழங்கப்பட்டது. காசோலை பணமாக்கும் பதிவேட்டின் பதிவுகள்.
- “X” ற்கு பணம் வழங்கப்பட்டதை உறுதி செய்வதற்கான சாட்சியம் நேரடி வாக்குமூலம் உரியவர்களிடம்.
- காசோலை குறுக்குக் கோடிடப்பட்டுள்ளதா? அல்லது குறுக்குக்கோடு நீக்கம் செய்யப்பட்டுள்ளதா?
- முன் திட்டமிட்டு வேண்டுமென்ற உணர்வுடன் இப்பணக் கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளதா?
- பணம் பெற்ற “X” இன் வாக்குமூலம் என்ன?
- ஏற்றுக்கொள்ளக் கூடியதா?
- ஏன் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது?

5.4.5 உரிய விடயம் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் வழங்கிய அறிவுரை என்ன? அவரது அறிவுரை பின்பற்றப்படாதவிடத்து கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

5.4.6 சங்கம் ஏன் இவரது அறிவுரையைப் பின்பற்ற தவறியுள்ளது.

5.4.7 பரிசோதனையின் மீதான காண்புகளின் அடிப்படையில்,

1. இயக்குனர் சபைக்கு சுமத்தக்கூடிய குற்றச் சாட்டுக்கள்.
2. எவரேனும் இயக்குனருக்கு அல்லது தலைவருக்கு மட்டும் சுமத்தக்கூடிய குற்றச்சாட்டுக்கள்.
3. அறவிடக்கூடிய பணம் பற்றிய விபரம்.
4. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு குற்றம் சுமத்தக் கூடிய குற்றச் செயல்கள். (யார், யாருக்கு)
5. சங்கத்திற்கு வழங்க வேண்டிய அறிவுரைகள்.
   - ஆகிய விபரங்கள் தனித்தனியாக அறிக்கையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. குற்றச்சாட்டுக்களுக்கான சாட்சி ஆவணங்கள் பட்டியல் படுத்தல் வேண்டும்.

6 46(1) பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் முன் கூறப்பட்ட தொடர் இல. 5.4.7ல் உள்ள குற்றச் சாட்டுக்கள், நட்டங்கள், இழப்புக்கள் என்பன சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கக் கூடியதாக உள்ளதா என மீளாய்வு செய்து திருப்திப்படின் மீளாய்வு அறிக்கையையும் 46(1) பிரிவின் கீழான அறிக்கையையும் மூன்று நாட்களில் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்துதல் வேண்டும்.

7 46(1) பிரிவின் கீழான பரிசோதனை அறிக்கை ஆகக் கூடியது ஒருவார காலத்தில் முடிவுறுத்தப்பட்டு மூன்று நாட்களில் மீளாய்வு செய்யப்பட்ட பின் எனக்கு உடன் அனுப்பிவைக்கத் தவறும் அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பதவி உயர்வுகளின் போது ஒழுக்காற்றின் தாக்கத்தினை அனுபவிக்க வேண்டி நேரிடும் என்பதையும் முன் கூட்டியே அறியத்தருகின்றேன்.

8 i. 46(1) பிரிவின் கீழ் விசாரணை, பரிசோதனை மேற்கொள்வதற்கு குழு அமைக்கப்படின் ஆய்வு செய்ய வேண்டிய விடயங்கள் குழு உறுப்பினரிடையே பங்கீடு செய்யும் திட்டத்தினை குழுத்தலைவர் எனக்கு உடன் அனுப்பி வைத்தல் வேண்டும். குழு உறுப்பினர் ஒன்றிணைந்து ஒரே விடயத்தினை ஆய்வு செய்தலாகாது. 46(1) பரிசோதனையின் அறிக்கையில் குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தனித்தனியாக தாம் ஆய்வு செய்த விடயம் தொடர்பான அறிக்கையை உறுதி செய்து குழுத் தலைவருக்கு கையளித்த பின் குழுத்தலைவர் தனது அறிக்கையையும் பொது அறிக்கையையும் இணைத்து ஒரு அறிக்கையாக எனக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. இதன்போது குழுத்தலைவர் ஏனைய பரிசோதனை அலுவலர் சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்து திருப்திபட்டதன் பின் பூரண அறிக்கையின் இறுதியில் சகலரும் கையொப்பமிடல் வேண்டும்.

9 46(1) விசாரணை மற்றும் பரிசோதனையின் போது உண்மையான தகவல்களை வெளிப்படுத்தத் தவறும் அலுவலர்களும் குற்றம் புரிந்தவராக கருதப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர்.

10 குறைபாடுகளுடன் அறிக்கை சமர்ப்பிப்போர் பதவி உயர்வின் போது சய புள்ளிகளைப் பெறுவதுடன் தண்டணையின் மீதான இடமாற்றத்திற்கு ஆளாக வேண்டியும் நேரிடலாம்.

மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வழிமுறை சாதாரண முறைப்பாட்டு விசாரணை மற்றும் அறிக்கையிடல் ஆகிய நடவடிக்கையின் போதும் பின்பற்றப்படலாம். விசேடமாக 5.4.2 பிரிவிற்கமைய அறிக்கையிடப்படல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையை அடுத்து நடைபெறும் தங்கள் பிரிவின் அலுவலர் மாதாந்த கூட்டத்தில் சமர்ப்பித்து போதிய விளக்கம் அளித்தபின் கூட்டக்குறிப்புப் பிரதியை எனக்கு அனுப்பி வைக்கவும்.

சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றதை உறுதி செய்யவும். அத்துடன் இந்த விசாரணை தொடர்பில் வதிவிட பயிற்சிப்பட்டறை ஒன்று வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தால் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். சகல உதவி ஆணையாளர்களும் தங்கள் பிரிவில் 04 உத்தியோகத்தர் வீதம் இதற்கு சிபாரிசு செய்து அனுப்புமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆ.சுப்பிரமணியசர்மா.** O/C
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வகிமா)

பிரதி : 1. செயலாளர், மாகாண பொது நிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சு.
2. பொறுப்பாளர், கூட்டுறவு பயிற்சி நிறுவனம், பயிற்சியாளர் - தகவலுக்காக.

-கிம.